# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

1

اَللّٰهُمَّ أَكْثِرْ مَالِي، وَوَلَدِي،
وَبَارِكْ لِي فِيمَا أَعْطَيْتَنِي

அல்லாஹும்ம அக்ஸி(ث)ர் மாலீ வவலதீ
வபாரிக்லீ பீ(ف)மா அஃத(ط)ய்தனீ

யா அல்லாஹ்! எனது செல்வத்தையும், குழந்தைகளையும் அதிகமாக்குவாயாக! எனக்கு நீ வழங்கியவற்றில் வளத்தை அளிப்பாயாக!

## குறிப்பு

நபி(ﷺ) அவர்கள் அனஸ்(ரலி) அவர்களுக்கு செய்த இந்தப் பிரார்த்தனையை நாமும் ஓதி வருவோம்.

அறிவிப்பாளர்: அனஸ்(ரலி) அவர்கள், புகாரி 6334

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

2-A

اَللّٰهُمَّ أَلِّفْ بَيْنَ قُلُوْبِنَا،

وَأَصْلِحْ ذَاتَ بَيْنِنَا، وَاهْدِنَا سُبُلَ السَّلَامِ ، وَنَجِّنَا

مِنَ الظُّلُمَاتِ إِلَى النُّوْرِ ، وَجَنِّبْنَا الْفَوَاحِشَ مَا ظَهَرَ

مِنْهَا وَمَا بَطَنَ ، وَبَارِكْ لَنَا فِي أَسْمَاعِنَا، وَأَبْصَارِنَا،

وَقُلُوْبِنَا، وَأَزْوَاجِنَا وَذُرِّيَّاتِنَا، وَتُبْ عَلَيْنَا إِنَّكَ أَنْتَ

التَّوَّابُ الرَّحِيمُ ، وَاجْعَلْنَا شَاكِرِينَ لِنَعْمَتِكَ

مُثْنِيْنَ بِهَا عَلَيْكَ ، قَابِلِينَ لَهَا ، وَأَتِمَّهَا عَلَيْنَا

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள், அபூதாவூத் 969

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

2-B

அல்லாஹும்ம அல்லிஃப்(ف) பைன குலூபினா வஅஸ்(ص)லிஹ் தாத பய்னினா வஹ்தினா ஸுபுலஸ் ஸலாம், வநஜ்ஜினா மினழ்(ظ)ழுலுமா(த்)தி இலன்னூர். வஜன்னிப்னல் ப(ف)வாஹிஷ மா ழ(ظ)ஹர மின்ஹா வமா பத(ط)ன், வபாரிக்லனா பீ(ف) அஸ்மாஇனா வஅப்ஸா(ص)ரினா வகுலூபினா வஅஸ்(ز)வாஜினா வதுர்ரிய்யாதினா. வதுப் அலைனா இன்னக அன்தத்தவ்வாபுர் ரஹீம். வஜ்அல்னா ஷாகிரீன லிநிஃமதிக முஸ்(ث)னீன பிஹா, அலைக, காபிலீன லஹா, வஅதிம்ஹா அலைனா.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள், அபூதாவூத் 969

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

2-C

"யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு மத்தியில் நீ இணக்கத்தை ஏற்படுத்துவாயாக! எங்களுக்கிடையிலான உறவுகளைச் சீர்படுத்துவாயாக! எங்களை அமைதியின் வழிகளில் செலுத்துவாயாக! எங்களை இருள்களிலிருந்து வெளிச்சத்திற்குப் பாதுகாப்பாகக் கொண்டு வருவாயாக! மானக்கேடான காரியங்களில் வெளிப்படையானவை மற்றும் மறைமுகமானவற்றிலிருந்து எங்களை விலக்கி வைப்பாயாக! எங்கள் செவிப்புலன்களிலும், எங்கள் பார்வைகளிலும், எங்கள் உள்ளங்களிலும், எங்கள் துணைகளிலும், எங்கள் சந்ததிகளிலும் எங்களுக்கு நீ பரக்கத் (அருள் வளம்) செய்வாயாக! எங்கள் தவ்பாவை (பாவமன்னிப்பை) ஏற்றுக்கொள்வாயாக! நிச்சயமாக நீயே தவ்பாவை அதிகம் ஏற்றுக்கொள்பவன், மிக்க கருணையாளன். உனது அருட்கொடைக்கு நன்றி செலுத்துபவர்களாகவும், அதைக் கொண்டு உன்னைப் புகழ்பவர்களாகவும், அதை ஏற்றுக்கொள்பவர்களாகவும் எங்களை ஆக்குவாயாக! மேலும், அந்த அருட்கொடையை எங்களுக்கு முழுமையாக்குவாயாக!"

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள், அபூதாவூத் 969

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

3

أَسْتَغْفِرُ اللهَ

அஸ்தக்(غ)பி(ف)ருல்லாஹ்

**நான் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுகிறேன்.**

மேலும், "நீங்கள் உங்களுடைய இறைவனிடம் மன்னிப்புத் தேடுங்கள், நிச்சயமாக அவன் மிகவும் மன்னிப்பவன் என்றும் கூறினேன். "(அப்படிச் செய்வீர்களாயின்) அவன் உங்கள் மீது தொடர்ந்து மழையை அனுப்புவான். அன்றியும் அவன் உங்களுக்குப் பொருள்களையும், புதல்வர்களையும் கொண்டு உதவி செய்வான். இன்னும், உங்களுக்காகத் தோட்டங்களை உண்டாக்குவான். உங்களுக்காக ஆறுகளையும் (பெருக்கெடுத்து ஓடுமாறு) உண்டாக்குவான்.

அல்குர்ஆன் 71: 10-12

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

4-A

## இஸ்திகாரா துஆ

اَللّٰهُمَّ إِنِّي أَسْتَخِيرُكَ بِعِلْمِكَ وَأَسْتَقْدِرُكَ بِقُدْرَتِكَ، وَأَسْأَلُكَ مِنْ فَضْلِكَ الْعَظِيمِ ، فَإِنَّكَ تَقْدِرُ وَلَا أَقْدِرُ ، وَتَعْلَمُ وَلَا أَعْلَمُ ، وَأَنْتَ عَلَّامُ الْغُيُوبِ،

اَللّٰهُمَّ إِنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هَذَا الأَمْرَ خَيْرٌ لِي فِي دِينِي وَمَعَاشِي وَعَاقِبَةِ أَمْرِي عَاجِلِ أَمْرِي وَآجِلِهِ فَاقْدُرْهُ لِي وَيَسِّرْهُ لِي، ثُمَّ بَارِكْ لِي فِيهِ،

وَإِنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هَذَا الْأَمْرَ شَرٌّ لِي فِي دِينِي وَمَعَاشِي وَعَاقِبَةِ أَمْرِي فِي عَاجِلِ أَمْرِي وَآجِلِهِ

فَاصْرِفْهُ عَنِّي وَاصْرِفْنِي عَنْهُ، وَاقْدُرْ لِي الْخَيْرَ حَيْثُ كَانَ، ثُمَّ أَرْضِنِي

அறிவிப்பவர்: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி)அவர்கள், புகாரி 6382, 1162, 7390.

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

4-B

## இஸ்திகாரா துஆ

அல்லாஹும்ம இன்னீ அஸ்தகீ(خ)ருக பிஇல்மிக,
வ அஸ்தக்திருக பி குத்ரத்திக,
வ அஸ்அலுக மின் ப(ف)ழ்(ض)லிகல் அழீ(ظ)ம்.
ப(ف)இன்னக தக்திரு வலா அக்திரு
வதஃலமு வலா அஃலமு வஅந்த அல்லாமுல் கு(غ)யூப்.

அல்லாஹும்ம இன்குன்த தஃலமு அன்ன ஹாதல் அம்ர கை(خ)ருல்லி
பீ(ف) தீனி, வமஆஷி, வ ஆகிபதி அம்ரீ ஆஜிலி அம்ரீ வஆஜிலிஹி
ப(ف)க்துர்ஹுலி வ யஸ்ஸிர்ஹுலி ஸு(ث)ம்ம பாரிக்லி பீ(ف)ஹி

வ இன் குன்த தஃலமு அன்ன ஹாதல் அம்ர ஷர்ருல்லி பீ(ف) தீனீ,
வ மஆஷி, வ ஆகிபதி அம்ரீ பீ(ف) ஆஜிலி அம்ரீ வ ஆஜிலிஹி

ப(ف)ஸ்(ص)ரிப்(ف)ஹு அன்னீ, வஸ்(ص)ரிப்(ف)னீ அன்ஹு,
வக்துர்லியல் கை(خ)ர ஹைஸு(ث) கான, ஸு(ث)ம்ம அர்ளி(ض)னீ

அறிவிப்பவர்: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி)அவர்கள், புகாரி 6382, 1162, 7390.

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

4-C

## இஸ்திகாரா துஆ

இறைவா! நீ அறிந்துள்ள படி (எது எனக்கு) நன்மை(யோ அ)தனை உன்னிடம் யாசிக்கிறேன். உனது ஆற்றலால் எனக்கு ஆற்றல் உண்டாக வேண்டுமென உன்னிடம் யாசிக்கிறேன். உன்னுடைய மாபெரும் அருளை யாசிக்கிறேன். ஏனெனில், 'நீயே ஆற்றல் மிக்கவன், எனக்கோ எந்த ஆற்றலும் கிடையாது. நீயே நன்கறிந்தவன், எனக்கோ எந்த அறிவும் கிடையாது. நீயே மறைவானவற்றை நன்கறிந்தவன்.

இறைவா! இந்தக் காரியம் எனக்கு 'என் மார்க்கத்திலும் என் வாழ்க்கையிலும் என் காரியத்தின் முடிவிலும்' அல்லது எனது உடனடியான, தாமதமான விவகாரத்திற்கும் நன்மையானதாக இருக்குமென நீ அறிந்திருந்தால் அதைச் சாதிப்பதற்குரிய ஆற்றலை எனக்கு வழங்குவாயாக!

இந்தக் காரியம் எனக்கு 'என் மார்க்கத்திலும் என் வாழ்க்கையிலும் என் காரியத்தின் முடிவிலும்' அல்லது எனது உடனடியான, தாமதமான விவகாரத்திற்கும் தீமையானதென நீ அறிந்திருந்தால் இக்காரியத்தை என்னை விட்டுத் திருப்பிவிடுவாயாக! என்னையும் இக்காரியத்தை விட்டுத் திருப்பிவிடுவாயாக.

நன்மை எங்கிருந்தாலும் அதை அடைவதற்குரிய ஆற்றலை எனக்கு வழங்குவாயாக! பிறகு அதில் எனக்குத் திருப்தியை அளித்திடுவாயாக.

அறிவிப்பவர்: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி)அவர்கள், புகாரி 6382, 1162, 7390.

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

5

## விருந்தளித்தவருக்காக ஓத வேண்டிய துஆ

اَللّٰهُمَّ بَارِكْ لَهُمْ فِيمَا رَزَقْتَهُمْ وَاغْفِرْ لَهُمْ وَارْحَمْهُمْ

அல்லாஹும்ம பாரிக் லஹும் பீ(ف)மா ரஸ(ز)க்தஹும் வக்(غ)பி(ف)ர்லஹும் வர்ஹம்ஹும்

யா அல்லாஹ்! நீ அவர்களுக்கு வழங்கியவற்றில் பரக்கத்துச் செய்வாயாக! அவர்களுக்கு நீ பாவம் பொறுத்து அருளவும் செய்வாயாக! அவர்களுக்கு நீ அருளும் செய்வாயாக!

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு புஸ்ர் (ரலி) அவர்கள், திர்மிதி 3576

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

6

## பால் அருந்தியதும் ஓத வேண்டிய துஆ

اَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِيْهِ وَزِدْنَا مِنْهُ

அல்லாஹும்ம பாரிக் லனா
பீ(ف)ஹி வஸி(ز)த்னா மின்ஹு

இறைவா! இதில் எமக்கு பரக்கத் செய்வாயாக! இதைவிட எமக்கு அதிகப் படுத்துவாயாக!

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், அபூதாவுத் 3730, திர்மிதி 3455

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

7

## உண்ட பிறகு ஓத வேண்டிய துஆ

اللّٰهُمَّ بَارِكْ لَنَا فِيْهِ وَأَطْعِمْنَا خَيْرًا مِنْهُ

அல்லாஹும்ம பாரிக் லனா பீ(ف)ஹி வஅத்(ط)இம்னா கை(خ)ரம் மின்ஹு

**இறைவா! இதில் எமக்கு பரக்கத் செய்வாயாக! இதைவிட சிறந்ததை எமக்கு உணவளிப்பாயாக!**

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், அபூதாவுத் 3730, திர்மிதி 3455

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

**8-A**

اَللّٰهُمَّ اهْدِنِي فِيمَنْ هَدَيْتَ ، وَعَافِنِي فِيمَنْ عَافَيْتَ ،
وَتَوَلَّنِي فِيمَنْ تَوَلَّيْتَ ، وَبَارِكْ لِي فِيمَا أَعْطَيْتَ ،
وَقِنِي شَرَّ مَا قَضَيْتَ ، إِنَّكَ تَقْضِي وَلَا يُقْضَى عَلَيْكَ ،
إِنَّهُ لَا يَذِلُّ مَنْ وَالَيْتَ ، تَبَارَكْتَ رَبَّنَا وَتَعَالَيْتَ

அல்லாஹும் மஹ்தினீ பீ(ف)மன் ஹதைத். வஆபி(ف)னீ பீ(ف)மன் ஆபை(ف)த். வ(த்)தவல்லனீ பீ(ف)மன் தவல்லைத். வபாரிக்லீ பீ(ف)மா அஃதை(ط)த். வகினீ ஷர்ர மா கதை(ض)த். இன்னக தக்ழீ(ض) வலா யுக்ழா(ض) அலைக். இன்னஹு லாயதில்லு மன் வாலைத். தபாரக்த ரப்பனா வதஆலைத்.

ஹஸன் இப்னு அலீ(ரலி) அவர்கள், நஸாயீ 1744

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

8-B

இறைவா! நீ நேர்வழி காட்டியவர்களுடன் சேர்த்து எனக்கும் நேர்வழி காட்டுவாயாக! நீ ஆரோக்கியம் அளித்தவர்களுடன் சேர்த்து எனக்கும் ஆரோக்கியம் அளிப்பாயாக! நீ பொறுப்பேற்றுக் கொண்டவர்களுடன் சேர்த்து எனக்கும் பொறுப்பேற்றுக் கொள்வாயாக! நீ எனக்குத் தந்திருப்பவற்றில் பரக்கத் செய்வாயாக! நீ விதியாக்கியவைகளில் உள்ள கெடுதியை விட்டும் என்னைக் காப்பாயாக! நிச்சயமாக நீயே விதிப்பவன், உன் மீது எதையும் விதிக்க முடியாது. நிச்சயமாக நீ யாரை நேசித்து விட்டாயோ அவர் இழிவடைய மாட்டார். எங்கள் இறைவா! உன் அருள் விசாலமானது, உன் மகத்துவம் மேலானது.

ஹஸன் இப்னு அலீ(ரலி) அவர்கள், நஸாயீ 1744

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

9

## நூஹ்(அலை) அவர்களுக்கு கேட்குமாறு அல்லாஹ் கட்டளையிட்ட துஆ

رَّبِّ اَنْزِلْنِي مُنْزَلًا مُّبٰرَكًا
وَّأَنْتَ خَيْرُ الْمُنْزِلِينَ

ரப்பி அன்ஸி(ز)ல்னீ முன்ஸ(ز)லம் முபாரகவ்
வஅன்த கை(خ)ருல் முன்ஸி(ز)லீன்

இறைவனே! நீ மிகவும் பாக்கியம் உள்ள இறங்கும் தளத்தில் என்னை இறக்கி வைப்பாயாக! நீயே இறக்கி வைப்பவர்களில் மிக்க மேலானவன்.

அல்குர்ஆன் 23:29

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

10-A

## நபி(ﷺ) அவர்கள் மதீனாவின் பரக்கத்திற்காக செய்த துஆ

اَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِيْ مَدِيْنَتِنَا، اَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِيْ صَاعِنَا،

اَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِيْ مُدِّنَا، اَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِيْ صَاعِنَا،

اَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِيْ مُدِّنَا، اَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِيْ مَدِيْنَتِنَا،

اَللّٰهُمَّ اجْعَلْ مَعَ الْبَرَكَةِ بَرَكَتَيْنِ

அல்லாஹும்ம பாரிக் லனா பீ(ف) மதீன(த்)தினா,
அல்லாஹும்ம பாரிக் லனா பீ(ف) ஸா(ص)இனா,
அல்லாஹும்ம பாரிக் லனா பீ(ف) முத்தினா,
அல்லாஹும்ம பாரிக் லனா பீ(ف) ஸா(ص)இனா,
அல்லாஹும்ம பாரிக் லனா பீ(ف) முத்தினா,
அல்லாஹும்ம பாரிக் லனா பீ(ف) மதீன(த்)தினா,
அல்லாஹும்மஜ்அல் மஅல் பரக்கதி பரக்கதைன்

அறிவிப்பவர்: அபூசயீத் (ரலி) அவர்கள் ஆதாரம்: முஸ்லிம் 2662

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

10-B

இறைவா! எங்கள் மதீனாவில் (நகரில்) எங்களுக்கு வளம் சேர்ப்பாயாக! இறைவா! எங்கள் (பெரிய அளவையான) "ஸாஉ"வில் எங்களுக்கு வளத்தை ஏற்படுத்துவாயாக! இறைவா! எங்கள் (சிறிய அளவையான) "முத்"துவிலும் எங்களுக்கு வளத்தை ஏற்படுத்துவாயாக! இறைவா! எங்கள் "ஸாஉ"விலும், எங்கள் "முத்"துவிலும், எங்கள் நகரத்திலும் எங்களுக்கு வளம் சேர்ப்பாயாக! இறைவா! இப்போதுள்ள வளத்துடன் இரு(மடங்கு) வளத்தை ஏற்படுத்துவாயாக!"

அறிவிப்பவர்: அபூசயீத் (ரலி) அவர்கள் ஆதாரம்: முஸ்லிம் 2662

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

11

اللّٰهُمَّ بَارِكْ لَنَا فِيْ شَامِنَا وَفِيْ يَمَنِنَا

அல்லாஹும்ம பாரிக் லனா பீ(ف) ஷாமினா, வபீ(ف) யமனினா

யா அல்லாஹ் எமது ஷாமுக்கும், எமது யமனுக்கும், பரக்கத் செய்வாயாக!

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள், புஹாரி 1037

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

12

## ஆச்சரியத்தை ஏற்படுத்தும் ஒன்றைப் பார்த்தால் பரக்கத்துக்காக பிரார்த்திப்பது

بَارَكَ اللّٰهُ لَكَ

பாரகல்லாஹு லக

அல்லாஹ் உனக்கு பரக்கத் செய்வானாக

அறிவிப்பவர்: அபூ உமாமா பின் சஹ்ல் பின் ஹுனைஃப் (ரலி) அவர்கள், இப்னு மாஜஹ் 3509

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

13

## கடனைத் திருப்பிச் செலுத்தும் போது கூற வேண்டியது

நபி (ﷺ) அவர்கள் என்னிடமிருந்து நாற்பதாயிரம் (திர்ஹம்) கடனாகப் பெற்றார்கள். பிறகு அவர்களிடம் செல்வம் வந்தபோது, அதை எனக்குத் திருப்பிச் செலுத்திவிட்டுப் பின்வருமாறு கூறினார்கள்:

بَارَكَ اللهُ لَكَ فِي أَهْلِكَ وَمَالِكَ إِنَّمَا جَزَاءُ السَّلَفِ الْحَمْدُ وَالْأَدَاءُ

பாரக்கல்லாஹு லக பீ(ف) அஹ்லிக வமாலி(க்)க இன்னமா ஜஸா(ز)உஸ் ஸலபி(ف)ல் ஹம்து வல் அதாஉ

அல்லாஹ் உங்களது குடும்பத்திலும் உங்களது செல்வத்திலும் பரக்கத் செய்வானாக! 'நிச்சயமாக கடனுக்கான பிரதிபலன் (நன்றியுரைத்து) புகழ்வதும், அதைத் திருப்பிச் செலுத்துவதும் தான்'.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் அபீ ரபீஆ (ரலி) அவர்கள், நஸாஈ 4683

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

14

## உதவியவருக்காக இவ்வாறு பிரார்த்திப்பது

(என் தந்தை) அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களிடம் சஅத் பின் அர்ரபீஉ (ரலி) அவர்கள், "நான் அன்சாரிகளில் அதிகச் செல்வம் உடையவன்.

என் செல்வத்தை இரு பாதிகளாகப் பங்கிட்டு நான் (ஒரு பாதியை உங்களுக்குக் கொடுத்து)விடுகிறேன். எனக்கு இரு மனைவிமார்கள் உள்ளனர். அவ்விருவரில் உங்களுக்கு அதிகமாகப் பிடித்திருப்பவளைப் பார்த்து என்னிடம் சொல்லுங்கள். நான் அவளை மணவிலக்குச் செய்து விடுகிறேன். அவளுடைய "இத்தா" காலம் முடிந்தபின் அவளை நீங்கள் மணந்து கொள்ளுங்கள்" என்று சொன்னார்.

அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள்,

بَارَكَ اللّٰهُ لَكَ فِيْ أَهْلِكَ وَمَالِكَ

பாரகல்லாஹு லக பீ(ஃ) அஹ்லிக வமாலிக்

"அல்லாஹ் உங்களுக்கு உங்கள் வீட்டாரிலும் உங்கள் செல்வத்திலும் அருள்வளத்தை வழங்கட்டும். உங்கள் கடைவீதி எங்கே?" என்று கேட்டார்கள்.

அறிவிப்பவர்: அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள், புஹாரி 3780

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

15

## உதவியவர்கள் கூறுவதும், அதற்கு பதிலும்

அல்லாஹ்வின் தூதர்(ﷺ)அவர்களுக்கு ஓர் ஆடு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அப்போது அவர் "அதைப் பங்கிட்டு (ஏழைகளுக்கு) வழங்குங்கள்" என்று கூறினார்கள். பணிப்பெண் திரும்பி வந்தபோது, "அவர்கள் உங்களிடம் என்ன கூறினார்கள்?" என ஆயிஷா (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவள்,

بَارَكَ اللهُ فِيكُمْ

**பாரகல்லாஹு பீ(ف)கும்**

"அல்லாஹ் உங்களுக்கு பரக்கத் (அபிவிருத்தி) வழங்குவானாக" எனக் கூறினார்கள்.
அப்போது ஆயிஷா (ரலி) அவர்கள்,

وَفِيهِمْ بَارَكَ اللهُ

**வபீ(ف)ஹிம் பாரகல்லாஹ்**

"அவர்களுக்கும் அல்லாஹ் பரக்கத் வழங்குவானாக" என்று எனக் கூறினார்கள். அதாவது, அவர்கள் கூறிய அதே வாழ்த்தை அவர்களுக்குத் திருப்பிக் கூறுவார்கள். இதனால், நமக்குரிய நன்மையின் கூலி நமக்கே நிலைத்திருக்கும்

ஸுனனுன் நஸாஈ ஃபில் குப்ரா 91

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

16

## மணமக்களுக்கான பிரார்த்தனை

நபி (ﷺ) அவர்கள் ஒருவருக்குத் திருமணம் நடந்தால், (அவருக்கு) வாழ்த்துத் தெரிவிக்கும்போது,

بَارَكَ اللهُ لَكَ وَبَارَكَ عَلَيْكَ وَجَمَعَ بَيْنَكُمَا فِي خَيْرٍ

பாரகல்லாஹு லக, வபாரக அலை(க்)க, வஜமஅ பைனகுமா பீ(ف) கை(خ)ர்

(அல்லாஹ் உனக்கு அருள் புரிவானாக! உன் மீது அருள் புரிவானாக! உங்கள் இருவரையும் நன்மையில் ஒன்றிணைப்பானாக!) என்று கூறுவார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், அபூதாவுத் 2130

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

**17**

## குழந்தைப் பிறந்து விட்டால் பரக்கத்துக்காக நபி (ﷺ) அவர்கள் இவ்வாறு பிரார்த்தித்தார்கள்

### ஆண் குழந்தைப் பிறந்து விட்டால்

بَارَكَ اللّٰهُ لَكَ فِيهِ وَجَعَلَهُ بَرًّا تَقِيًّا

பாரகல்லாஹு லக பீ(ஃ)ஹி வஜஅலஹு பர்ரன் தகிய்யன்

"அல்லாஹ் அதில் உங்களுக்கு பரக்கத் (அபிவிருத்தி) வழங்குவானாக! மேலும் அவனை நன்மை செய்பவனாகவும், இறையச்சமுடையவனாகவும் ஆக்குவானாக!"

### பெண் குழந்தைப் பிறந்து விட்டால்

بَارَكَ اللّٰهُ لَكَ فِيهِ وَجَعَلَهَا بَرَّةً تَقِيَّةً

பாரகல்லாஹு லக பீ(ஃ)ஹா, வஜஅலஹா பர்ரதன் தகிய்யதன்

"அல்லாஹ் அதில் உங்களுக்கு பரக்கத் (அபிவிருத்தி) வழங்குவானாக! மேலும் அவளை நன்மை செய்பவளாகவும், இறையச்சமுடையவளாகவும் ஆக்குவானாக!"

அறிவிப்பவர்: அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள், பஸ்ஸார் 7310

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

18

## குழந்தை கொண்டு வரப்பட்டால் நபி (ﷺ) அவர்கள் அதன் பரகத்துக்காக பிரார்த்திப்பார்கள்

بَارَكَ اللهُ لَكَ

பாரகல்லாஹு லக

அல்லாஹ் உனக்கு பரக்கத் செய்வானாக

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களிடம் குழந்தைகள் கொண்டு வரப்படுவார்கள். அவர்களுக்காக அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் சுபிட்சம் (பரக்கத்) வேண்டிப் பிரார்த்தித்து, இனிப்புப் பொருளை மென்று அக்குழந்தைகளின் வாயிலிடுவார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி) அவர்கள், முஸ்லிம் 481

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

19

## நபி (ﷺ) அவர்கள் பரக்கத்துக்காக செய்த பிரார்த்தனை

ஸக்ர் அல்-ஃகாமீதீ (ரலி) அவர்கள் அறிவித்தார்கள்:

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

اَللّٰهُمَّ بَارِكْ لِأُمَّتِيْ فِيْ بُكُوْرِهَا

அல்லாஹும்ம பாரிக்லி உம்ம(த்)தீ பீ(ஃ) புகூரிஹா

"யா அல்லாஹ்! என் சமூகத்தாருக்கு அவர்களின் அதிகாலை நேரங்களில் நீ பரக்கத் செய்வாயாக! (அதாவது, அருள்வளத்தையும், அபிவிருத்தியையும் வழங்குவாயாக!

அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி) அவர்கள், அபூதாவுத் 481

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

20

**பரக்கத்துக்காகப் பிரார்த்திப்பது நபிமார்களின் முன்மாதிரி மக்காவாசிகளின் உணவின் பரக்கத்திற்காக நபி இப்ராஹீம்(அலை) அவர்கள், இவ்வாறு பிரார்த்தித்தார்கள்**

اَللّٰهُمَّ بَارِكْ لَهُمْ فِي اللَّحْمِ وَالْمَاءِ

அல்லாஹும்ம பாரிக் லஹும் பி(ف)ல் லஹ்மி வல்மாஇ

இப்ராஹீம்(அலை) அவர்கள், "இறைவா! இவர்களுக்கு இறைச்சியிலும் தண்ணீரிலும் வளத்தை அளிப்பாயாக!" என்று பிரார்த்தனை புரிந்தார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புஹாரி 3364

# பரக்கத்தைக் கேட்கும் பிரார்த்தனைகள்

21

## மக்காவாசிகளின் உணவின் பரக்கத்திற்காக நபி இப்ராஹீம்(அலை) அவர்கள், இவ்வாறு பிரார்த்தித்தார்கள்

اَللّٰهُمَّ بَارِكْ لَهُمْ فِيْ طَعَامِهِمْ وَشَرَابِهِمْ

அல்லாஹும்ம பாரிக் லஹும் பீ(ف) த(ط)ஆமிஹிம் வஷராபிஹிம்

"இறைவா! இவர்களுக்கு இவர்களின் உணவிலும் பானத்திலும் வளத்தை அளிப்பாயாக!"

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புஹாரி 3365